செ.வெ.எண்: 872 நாள்: 30.12.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டுகட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் மொத்தம் 77.80 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் இன்று (30.12.2019) இரண்டாம் கட்டமாக அறந்தாங்கி, அரிமளம், ஆவுடையார்கோவில், பொன்னமராவதி, மணமேல்குடி, திருமயம் மற்றும் திருவரங்கும் ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்களில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 2,00,308 ஆண் வாக்காளர்களும், 2,36,231 பெண் வாக்காளர்களும் 1 இதர வாக்காளரும் என மொத்தம் 4,36,540 வாக்காளர்கள் 75.40 சதவீதம் வாக்கினை பதிவு செய்துள்ளனர்.

கடந்த 27.12.2019 அன்று நடைபெற்ற முதற்கட்ட வாக்குப்பதிவில் அன்னவாசல், குன்றாண்டார்கோவில், புதுக்கோட்டை, விராலிமலை, கந்தர்வக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் 1,86,720 ஆண் வாக்காளர்களும், பெண் வாக்காளர்கள் 2,00,854 ம், இதரர் 10 என மொத்தம் 3,87,584 வாக்காளர்கள் 80.70 சதவீதம் வாக்கினை பதிவு செய்திருந்தனர்.

**அதனடிப்படையில் இரண்டு கட்டங்களாக புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மொத்தம் 3,87,028 ஆண் வாக்காளர்களும், பெண் வாக்காளர்கள் 4,37,085 ம், இதரர் 11 என ஆக மொத்தம் 8,24,124 வாக்காளர்கள் 77.80 சதவீதம் வாக்கினை பதிவு செய்துள்ளனர்.**

மேலும் இன்றையதினம் **மறு வாக்குப்பதிவு** நடைபெற்ற விராலிமலை ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண் 15 ல் இடம் பெற்றுள்ள பாக்குடி, பேராம்பூர் மற்றும் கோங்குடிப்பட்டி ஆகிய மூன்று கிராம ஊராட்சிகளில் அடங்கியுள்ள 13 வாக்குச்சாவடிகளில் 1,954 ஆண் வாக்காளர்களும், 2,140 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 4,094 வாக்காளர்கள் 73.73 சதவீத வாக்கினை பதிவு செய்துள்ளார்கள்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**